நாள்: 27.03.2025
O.S. No.29/2019
பெயர்: அன்பழகன், த/பெ. சுப்பையா
வா.சா.1

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**</u>

வழக்கு சொத்தில் உரிமையை காட்டக்கூடிய ஆவணமாக வா.சா.ஆ.1 ஐ தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ள புல வரைபடம் வழக்கு சொத்துக்கானது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான "அ" பதிவேட்டினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சொத்தின் புல எண் என்னவென்றால் 5/A2, A3 ஆகும். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் எனது சொத்தின் புல எண். 5/A2, A3 என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். புல எண்.5/A2 உள்ளது எனது சொத்து அல்ல என்றால் சரியல்ல. புல எண்.5/A2 தொடர்பாக ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது வீட்டில் உள்ளது. எனது வீட்டின் மேற்கு புற சுவருக்கும், லெட்சுமண சொத்திற்கும் இரண்டிற்கும் இடையில் உள்ள சொத்து காலி மனை என்று கூறியுள்ளேன் சரிதான். மேற்படி சொத்திற்கு வடக்கு பக்கம் தான் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் என்னுடைய சொத்தும் பிரதிவாதியின் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி குடியிருந்து வரும் வீடு அவர்களது அனுபவத்தில் நான்கு தலைமுறைகளாக உள்ளது என்றால் இருக்கலாம். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் நான்கு சென்ட் என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தினை அபகரிக்க நான்கெல்லை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு மேற்கில் தென்னை மரம் உள்ளது என்றாலும், அங்கு மா மரம் இருந்து அது தற்போது பட்டுபோய் விட்டது என்றாலும், ஒரு வேப்ப மரம் தற்போது உள்ளது என்றாலும் சரிதான். உண்மையில் காலி மனை எனது அனுபவத்தில் இல்லாததால் தான் நான் சரியான விபரங்களை அளிக்கவில்லை என்றால் சரிதான். எனது வீட்டின் மேற்குபுற சுவற்றை ஒட்டி மாடி படியும் சந்தும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாடிபடியின் வழியாக சென்றால் எனது கொல்லைபுறத்திற்கு செல்லலாம் என்றால் சரியல்ல. மாடி படிக்கும் சந்துக்கும் மேற்கே ஒரு வேலி உள்ளது என்றாலும்அதை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழியை பிரதிவாதி அனுபவிப்பதற்கான நான் அனுமதி அளித்தேன் என்று பொய் சாட்சியமளித்தேன்

என்றால் சரியல்ல. காலி மனைக்கு தெற்கே தெரு உள்ளது என்றாலும் அந்த தெரு வழியாக தான் பிரதிவாதி அவரது வீட்டிற்கு செல்லமுடியும் என்றால் சரிதான். நான் எனது ஆர்.சி.சி வீட்டை வழக்கு சொத்தில் 2018–ம் வருடம் கட்டினேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதி ஊரில் இல்லாத சமயத்தில் அதில் கட்டுமானம் எழுப்பு ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்ததாக புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த புகார் அளிக்கப்பட்டதால் இவ்வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் காட்டப்பட்டுள்ள காலி மனை நடராஜனுக்கு சொந்தம் என்றால் சரியல்ல. புல எண்.5/A1, 5/A2, 5/12 இரண்டும் பிரதிவாதியின் அனுபவித்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. புல எண்.5/A2 நிலத்தை பிரதிவாதி நடராஜன் மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தில் கழிவறை இருப்பதால் தான் நான் அதனை அளக்க ஆணையர் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் பொய்யானவை என்றாலும் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.